செய்தி வெளியீடு எண்: 534 நாள்: 26.8.2009

<u>மோட்டார் வாகன பராமரிப்புத் துறை</u>

தமிழ் நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையானது தமிழ் நாடு அரசு போக்குவரத்து துறையின் நேரடி நிர்வாகத்தின் கீழ், தனித் துறையாக இயக்குநர் அவர்களை துறைத் தலைவராகக் கொண்டு 1.4.1981 முதல் ஒரு சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

தமிழ் நாடு அரசுத் துறைகளின் பயன்பாட்டில் உள்ள சுமார் 15250 பலரக ஊர்திகளின் பழுதுகளை நிவர்த்தி செய்து பராமரிப்பது இந்தத் துறையின் முக்கிய பணியாகும். இதற்காக பல்வேறு மாவட்டங்கள் அளவில் 19 பணிமனைகளும் சென்னையில் வேளச்சேரி பணிமனையும், முக்கிய பிரமுகர் மற்றும் அரசு செயலாளர்களுக்காக தலைமைச் செயலக பணி நிலையமும் 711 ஊழியர்களுடன் செயல்பட்டு, வாகனங்கள் பழுதுகள் சீர் செய்யப்பட்டு விடுவிக்கப்படுகிறது.

இத்துறையின் செயல்பாட்டை ஆய்வு நடத்திய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில் இத்துறையின் மண்டல துணை இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட பணிமனைகளின் தானியங்கிப் பொறியாளர்கள் ஆகியோருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கி ஆணைகள் பிறப்பித்து பராமரிப்பு பணிகள் சிறப்பாகவும் துரிதமாகவும் நடைபெற வழி வகுத்து கொடுத்ததன் காரணமாக, பழுது நீக்கத்திற்காக அனுமதிக்கப்படும் வாகனங்கள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து விடுவிக்கப்பட்டு வருவதால் பணிமனையில் வாகனங்களை பழுது பார்க்க நிறுத்தி வைக்கும் காலம் கணிசமாக குறைந்துள்ளது.

மேலும் நவீன ரக வாகனங்களை இத்துறை பணியாளர்கள் மூலமாகவே பராமரிப்பு மேற்கொள்வதற்காக ஊர்தி தயாரிப்பாளர்கள் மூலம் பணியாளர்களுக்கு நேரடி பயிற்சி

கொடுக்கப்பட்டு பணியாளர்களின் பணித்திறன் அதிகரிக்கப்பட்டு நவீன ரக ஊர்திகள் இத்துறை மூலமாகவே பழுது நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் தொழில் நுட்ப ரீதியாக ஒரு திறமையான நிர்வாகம் அடித்தளமிடப்பட்டு இத்துறைக்கான அரசின் இலக்கும் எய்த முடிகிறது

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் நிர்வாக பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் பலர் இந்த அரசின் மூலம் 71 பதவி உயர்வுகள் மற்றும் 62 புதிய பணி நியமன ஆணைகள் பெற்றுள்ளனர். இத்துறையில் பணிக்காலத்தில் இறந்து போன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு காத்திருப்போர் பட்டியல் மூலம் மூப்பு அடிப்படையில் ஏற்கனவே 18 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த நிகழ்ச்சியில் இத்துறையில் பணியாற்றி இறந்து போன வாரிசுதாரர்கள் 3 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அரசின் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இத்துறையின் சீரிய செயல்பாட்டிற்கு வழி வகுத்துள்ளது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களது ஆலோசனைப்படி இயக்குநர் அலுவலகமானது, வேளச்சேரி, அரசு மத்திய தானியங்கிப் பணிமனை வளாகத்தில் 10.11.2008 முதல் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

2/2

இயக்குநர்,
மோ.வா.ப.துறை, சென்னை 42.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9